**செய்திவெளியீடு எண்.6/2018** **நாள் 18.01.2018**

திருவொற்றியூர் மண்டலத்திற்கு உட்பட்ட பணிமனை– 4 முதல் 7 பகுதிகளில் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் ஜோதிநகர், முல்லைநகர், மகாலட்சுமிநகர், பாலாஜிநகர், கிரிஜாநகர், காமராஜ் நகர், மாகாளியம்மன் நகர், எர்னீஸ்வரன் நகர், சின்ன எர்னாவூர், கலைஞர் நகர், அம்பேத்கர் நகர், பாரத் நகர், ராமகிருஷ்ணா நகர், பாரதியார் நகர், காசிவிசாலாட்சிகுப்பம், நேதாஜி நகர், இராமநாதபுரம், காசிகோயில்குப்பம், பாலகிருஷ்ணா நகர், விநாயகபுரம், அண்ணாமலை நகர், சரவணாநகர், சண்முகபுரம், இராஜாசண்முகம் நகர், சரஸ்வதிநகர், சக்திகணபதிநகர், சுப்ரமணியம் நகர் இராமசாமிநகர் மற்றும் அன்னை சிவகாமி நகர் ஆகிய பகுதிகளில் முடிவடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

ஆகவே, பொதுமக்கள் வசதிக்காக கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கு 20.01.2018 அன்று இராமசாமிநகர், குடிநீர் வழங்கும் நிலையம், திருவொற்றியூர், சென்னை–19ல் காலை 10.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு விண்ணப்பம் பதிவு செய்யப்படவுள்ளது. பொதுமக்கள் இந்த வசதியை பயன்படுத்தி கழிவுநீர் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பத்தை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், பொதுமக்கள் கழிவுநீர் இணைப்பிற்கான தொகையை வரைவுக் காசோலையாக (Demand Draft / in favour of CMWSSB) சென்னை குடிநீர் வாரிய சிறப்பு முகாமிலேயே செலுத்த வசதி செய்யப்படவுள்ளது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்